இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 10.07.2026

# கரூர் என்றால் யாருக்கு பயம்? 2

தமிழ்நாடு அரசு விசாரித்தால் உண்மை உடனே வெளிவந்து விடும் என்று நினைத்து சி.பி.ஐ. பின்னால் போய் பதுங்கிக் கொண்டார் விஜய். இதற்குக் காரணமும் பயம்தானே?

**கரூரில் பலியான அப்பாவிக் குடும்பத்தினர் சிலரை ஏமாற்றி அவர்கள் மூலமாக சி.பி.ஐ. விசாரணை கேட்டு வழக்குப் போட வைத்தார்கள். பிரித்விக் என்ற சிறுவன் இந்தச் சம்பவத்தில் அநியாயமாக பலியானான். அவனது தந்தை பன்னீர்செல்வம், சி.பி.ஐ. விசாரணை கேட்டு வழக்குப் போட்டார். 'எட்டு ஆண்டுகளாக நானும் பன்னீர்செல்வமும் பிரிந்து வாழ்கிறோம். என் குழந்தை இறந்தபோதுகூட அவர் வரவில்லை' என்று அந்தச் சிறுவனின் தாய் ஷர்மிளா பேட்டி கொடுத்தார்.**

**இந்தச் சம்பவத்தில் சந்திரா என்பவர் இறந்து போனார். அவரது கணவர் செல்வராஜ் பேரில் சி.பி.ஐ. கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. செய்தி வெளியானதும், 'அரசாங்க வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி கையெழுத்து கேட்டார்கள். போட்டேன். சி.பி.ஐ. கேட்டு நான் மனு போடவில்லை' என்று சொன்னார் செல்வராஜ். இப்படி பல்வேறு கேவலங்களைச் செய்தார்கள் விஜய் கட்சி நிர்வாகிகள். சி.பி.ஐ. கேட்டு ஒடியது பயத்தினால்தானே?**

காவல் துறை அதிகாரி அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை சென்னை உயர்நீதிமன்றம் அமைத்தது. அதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் ஆதவ் அர்ஜுனா மேல்முறையீடு செய்தார். 'அஸ்ரா கர்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவை ரத்து செய்ய வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார். இதுவும் பயத்தினால்தானே? 'அஸ்ரா கர்க் விசாரித்தால் உண்மை வெளியில் வந்துவிடும்' என்று தானே பயந்தார்கள். அதே அஸ்ரா கர்க்தான் இன்றைய த.வெ.க. ஆட்சியில் புலனாய்வுப் பிரிவைக் கவனிக்கிறார்!

கரூர் வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கலாம் என்று 13.10.2025 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதியரசர்கள் ஜே.கே. மகேஸ்வரி, என்.வி. அஞ்சரியா ஆகியோர் கொண்ட அமர்வு அது. சி.பி.ஐ. விசாரணையைக் கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதி ரஸ்தோகி தலைமையில் மூவர் குழுவையும் நீதிமன்றம் அமைத்தது. அதுவரை விஜய்யும் விஜய் கட்சி நிர்வாகிகளும் பதுங்கித்தான் இருந்தார்கள். இவர்கள் பயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்.

**ஆட்சிக்கு வந்ததும் கரூர் காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்ட காவலர்கள் 19 பேரை இடமாற்றம் செய்தது பயத்தின் வெளிப்பாடுதான். உள்துறையை கையில் எடுத்ததும் முதலமைச்சர் விஜய் போட்ட முதல் கையெழுத்து இது தான். எதனால் இந்த பயம்? அந்த 19 பேரை மாற்றியதால் உண்மை மாறி விடுமா? அவர்களை கரூரில் இருந்து மாற்றியதால் அவர்கள்தான் மாறி விடுவார்களா? விஜய்க்கு மனச்சாட்சி இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு மனச்சாட்சி இருக்கத்தான் செய்யும்.**

இப்போது எதற்காக திடீர் கரூர் பயணம்? சாட்சிகளான அந்தக் குடும்பத்தினர் தனக்கு எதிராக மாறி விடக் கூடாது என்பதுதானே? கரூர் இடைத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அல்ல, தன் தலையைக் காப்பாற்றிக் கொள்ளவே விஜய் கரூர் செல்கிறார். தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளும் பயம், அவரது முகத்தில் தெரிகிறது.

**இறந்தவர் குடும்பத்தினர் வீட்டுக்குச் சென்று நேரில் சந்தித்து ஆறுதல் கூட சொல்லாமல், அவர்களைச் சென்னைக்கு வரவழைத்து ஆறுதல் சொன்னார் விஜய். இப்போது மீண்டும் எதற்காக கரூர் செல்ல வேண்டும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தான். 'கரூர்' அவர் கனவில் வந்து அந்தளவுக்கு ஆட்டிப் படைக்கிறது.**

இவ்வளவு பயந்த விஜய், உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனுதாக்கல் செய்துள்ளார் என்றதும் மேலும் பயந்து போனார். கரூருக்கு விஜய் செல்லக்கூடாது என்றோ, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நிவாரணம் தரக் கூடாது என்றோ அந்த மனுவில் குறிப்பிடவில்லை. உச்சநீதிமன்ற மேற்பார்வையில் சி.பி.ஐ. இந்த வழக்கை விசாரித்துக் கொண்டு இருக்கும் போது, 'கரூரில் நாங்கள் தீர்க்க வேண்டிய கணக்கு இருக்கிறது' என்றோ, 'போலீஸ்காரர்களை வைத்து சதி செய்து கொன்றார்கள்' என்றோ சொல்லலாமா? என்பதே தி.மு.க. எழுப்பும் கேள்வி ஆகும்.

'கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் தொடர்புடைய விஜய், புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுன், நிர்மல்குமார் ஆகியோர் கரூர் விவகாரம் தொடர்பாக பொதுவெளியில் பேசுவதற்குத் தடை விதிக்க வேண்டும்' என்பதுதான் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் தாக்கல் செய்த வழக்கு. 'இந்த மனுவை நீதிமன்ற அவமதிப்பு வழக்காகத் தாக்கல் செய்யுங்கள்' என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

"விஜய் கரூர் செல்வது, நிவாரணம் கொடுப்பது தொடர்பான விஷயங்களை உச்சநீதிமன்றத்தால் இதற்காக அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவிடம் கொடுங்கள்" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் அனுமதியும் வழங்கி இருக்கிறார்கள். அதாவது தி.மு.க.வின் இரண்டு கோரிக்கைகளையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அனுமதி வழங்கி இருக்கிறது.

இதைத் தொடர்ந்து சி.பி.ஐ.க்கும், சி.பி.ஐ. வழக்கை கண்காணிக்கும் குழுவுக்கும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு அனுப்பி இருக்கிறார். நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழுவுக்கு அனுப்பிய மனுவில், "முதலமைச்சர் விஜய் கரூர் செல்ல இருக்கிறார். அதைக் கண்காணிக்க வேண்டும். ஏற்கனவே சாட்சியம் அளித்தவர்களின் சாட்சியங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார். "சாட்சிகள் மீது செல்வாக்கு செலுத்துதல், தடுத்தல், தலையீடு செய்தல் ஆகிய செயல்களுக்காக ஆதவ் அர்ஜுனா மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும்" என்றும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**கரூருக்கு விஜய் செல்லக்கூடாது என்றோ, பாதிக்கப்பட்டவர் குடும்பங்களைச் சந்திக்கக் கூடாது என்றோ தி.மு.க. சொல்லவில்லை. ஆனால், 'கரூர் செல்ல விஜய்க்கு தடை இல்லை' என்று அனைத்து ஊடகங்களிலும் செய்தி வர வைக்கிறது விஜய் அரசு. நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்பதைக்கூட அறிந்து கொள்ளாமல் தலைப்புச் செய்தி எழுதுகிறவர்கள் கையில் பாரம்பரிய நாளிதழ்கள் சிக்கிவிட்டன. என்ன செய்ய?**

**'தலைப்புச் செய்திகளை' மாற்றலாம். நடக்க இருப்பதை மாற்ற முடியாது. கரூரில் 41 பேரை தனது விளம்பர வெறிக்காக பலியிட்ட விஜய், இன்றில்லை என்றாவது ஒருநாள் அதற்கான தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும். 'என்னை இங்க வரவிடாமல் கூட தடுத்தார்கள்' என்று அவர் அழலாம். ஆனால் வருங்கால தண்டனையில் இருந்து தப்ப முடியாது. அதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம்.**

●●

## பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் தேடல் குழுவில் யூ.ஜி.சி. உறுப்பினரைச் சேர்த்தால்

# இதுவரை போராடிப் பெற்ற மாநில உரிமையை விட்டுக் கொடுப்பதாகிவிடும்!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி!

**சென்னை, ஜூலை 10 –**

**பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் தேடல் குழுவில் யூ.ஜி.சி.யின் சார்பில் உறுப்பினரைச் சேர்ப்பது என்பது இதுவரை நாம் போராடிக் காப்பாற்றி வந்துள்ள உரிமையை நாமே விட்டுக் கொடுப்பது போல் ஆகிவிடும் என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

**பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் தேடல் குழுவில் ஒன்றிய அரசின் UGC உறுப்பினர்களையும் இணைக்கும் முயற்சிக்கு கண்டனம் தெரிவித்து கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் பேட்டி வருமாறு:**

ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் மண்டியிட்டு மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்கிறது த.வெ.க. அரசு உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் தேடல் குழுவில் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கையை 3 லிருந்து 5 ஆக உயர்த்தப் போவதாகத் தெரிவித்திருந்தார். இது முற்றிலும் மாநில உரிமைக்கு எதிரானது.

பல்கலைக் கழகங்களை செங்கல், சிமெண்ட் வைத்து கட்டுவதோடு ஒரு மாநில அரசினுடைய அதிகாரம் முடிவடையாது. அந்தப் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள், பேராசிரியர்கள், துணை வேந்தர்கள் என அனைவரையும் நியமிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் மாநில அரசுக்கு என்று அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.



1949 ல் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கும் போது ஒன்றிய அரசிற்கு டிட்டர்மினேஷன் ஆஃப் எஜுகேஷன், ஸ்டாண்டர்ட் ஆஃப் எஜுகேஷன் சம்பந்தமாக மட்டும்தான் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் கூறி இருப்பார். அதை மீறி 2018 இல் கொண்டுவரப்பட்ட UGC ரெகுலேஷன் 7.3 ன் மூலம் துணை வேந்தர் தேடல் குழுவில் UGC பிரதிநிதி இடம்பெற வேண்டும் என கூறப்பட்டது. அதை அப்போதைய அரசு ஏற்க மறுத்து அதற்கு எதிராக ஒரு அரசாணை வெளியிட்டது.

### ஆளுநர் தடை!

ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் 3 பேர் அடங்கிய குழுவில் ஒருவரை ஆளுநர் நியமிப்பார், ஒருவரை அரசு நியமிக்கும், ஒருவரை பல்கலைக் கழக சிண்டிகேட் நியமிக்கும். ஆனால் இந்த முறையை கடந்த ஆட்சியின் போது ஆளுநர் ஆர்.என். ரவி செயல்படுத்த மறுத்து துணை வேந்தர்கள் நியமனத்திற்கு தடையாக இருந்தார்.

ஆளுநருக்கு எதிராகவும், UGC விதி 7.3 க்கு எதிராகவும் தி.மு.க. அரசு சார்பில் வழக்கு போடப்பட்டு வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல துணைவேந்தர் நியமனத்தை முதலமைச்சரே மேற்கொள்ளும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்தோம். அந்தச் சட்டத் திருத்தத்தோடு 10 மசோதாக்களை ஏற்காமல் ஆளுநர் ஆர்.என். ரவி காலந்தாழ்த்திக் கொண்டு இருந்ததால் உச்சநீதிமன்றம் மூலம் அந்த 10 மசோதாக்களையும் சட்டமாக்கினோம்.

அது இந்தியாவே திரும்பிப் பார்க்கிற அளவிற்கு ஆளுநரிடன் அதிகாரத்தை வரைமுறைபடுத்தி உச்சநீதிமன்றம் ஒரு சட்டமாக வெளியிட்டது.

### ஒன்றிய அரசிடம் மண்டியிடும் த.வெ.க. அரசு!

ஆனால் இன்று உயர்கல்வித் துறை அமைச்சர் 5 நாமினியில் கவர்னர் பரிந்துரைக்கும் இரண்டு நாமினின்னு சொல்கிறார். இன்னொரு நாமினி யார் என்று அவர் மறைமுகமாக UGC நாமினியை கூறுகிறார். இந்த அரசு ஒன்றிய அரசுக்கு மண்டியிடப் பார்க்கிறார்களா.? இல்லை ஆளுநரின் அதிகாரம் பறிக்கப்படக் கூடாது என நினைக்கிறார்களா?

எதற்காக முதலமைச்சருக்கு இருக்க வேண்டிய அதிகாரத்தை எடுத்து ஆளுநருக்கு கொடுக்க வேண்டும். அதேபோல ஒன்றிய அரசு சொல்லும்படி UGC யின் நாமினியை இதில் சேர்ப்பது மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் மண்டியிட்டு மாநில உரிமைகளை விட்டுக்கொடுக் கிறது இந்த அரசு. மாநில அரசின் உரிமைகளை விட்டுக் கொடுக்க சொல்லி கூட்டணி ஆட்சியில் பங்கு பெற்றுள்ள காங்கிரஸின் ராகுல் காந்தி வலியுறுத்தினாரா?

### ஒன்றிய அரசின் அதிகாரம்!

இது நம்முடைய மாநில உரிமை. இதை விட்டு விடக்கூடாது. கடந்த ஐந்து ஆண்டுகளாக மாநில உரிமைக்காக உயர்நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றம் வரைக்கும் சென்று நாங்கள் வென்று வந்திருக்கிறோம். அதற்கு மாறாக யூஜிசி உறுப்பினர்களை குழுவில் சேர்ப்பது மூலம் நமது பல்கலைக் கழகங்களின் அதிகாரம் ஒன்றிய அரசு வசம் போய்விடும்.

கடந்த எங்களது கழக ஆட்சியில் கூட இவர்கள் சொல்வதைப் போல 5 நபர்களை குழுவில் வைத்துக் கொண்டு துணை வேந்தர்களை நியமித்து இருக்கலாம். ஆனால் மாநில உரிமையை விட்டுக் கொடுப்பது என்பது நம் மக்களின் உரிமையை விட்டுக் கொடுப்பது போல.

எனவே எக்காலத்திலும் இந்த UGC யின் நாமினியை செலக்சன் பேனலில் சேர்க்கவே கூடாது. சேர்த்தால் அரசியலமைப்புச் சட்டம் கொடுத்த மாநில உரிமை, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மாநில மக்களுக்கு கொடுத்த உரிமை, நாம் இது வரை போராடி காப்பாற்றி வந்துள்ள உரிமை ஆகியவைகளை நாமே விட்டு கொடுப்பது போல ஆகிவிடும்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி அளித்துள்ளார்.

## பள்ளிகள் திறந்து ஒரு மாதம் ஆகியும்

# மாணவர்களுக்கு - பாடப் புத்தகம் வழங்கவில்லை!

## படிக்க முடியாமல் அரசுப்பள்ளி மாணவர்கள் தவிப்பு!

*சென்னை, ஜூலை 10-*

*தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்பட்டு ஒரு மாத காலம் ஆகியும் பாடப்புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படாததால் அரசுப்பள்ளி மாணவ- மாணவிகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் மெட்ரிக். பள்ளிகள் என மொத்தம் 55,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சுமார் 1.15 கோடி மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளிகளில் 1 முதல் 9ம் வகுப்பு மாணவர்களுக்கு கடந்த கல்வியாண்டில் (2025-2026) இறுதித் தேர்வுகள் முடிந்ததும் ஏப்.17ம் தேதி முதல் கோடை விடுமுறை விடப்பட்டது. இதையடுத்து 1 முதல் பிளஸ் 2 வகுப்பு வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும் ஜூன் 4ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்தது.*

*பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளிலேயே அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் விலையில்லா பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டு ஒரு மாதம் ஆன பிறகும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் பல மாணவர்களுக்கு இன்னும் சில பாடப்புத்தகங்கள் கிடைக்கவில்லை. பெரும்பாலான பள்ளிகளில், பாதி மாணவர்களுக்கு மட்டுமே பாடப் புத்தகங்கள் கிடைத்துள்ளதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர். அதுவும் ஒன்று முதல் 3ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மட்டுமே பாட புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், பள்ளித் தலைவர்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*

### கல்வியாளர்கள் குற்றச்சாட்டு!

*வகுப்புகள் தொடங்கி ஒரு மாதம் ஆகியும், மாநிலம் முழுவதும் உள்ள பல அரசுப் பள்ளிகளுக்கு, குறிப்பாக 4ம் வகுப்பு மற்றும் 5ம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் இன்னும் கிடைக்கவில்லை. இந்தக் கல்வியாண்டில் அமல்படுத்தப்பட்ட ஒன்றாம் மற்றும் மூன்றாம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடங்களைத் திட்டமிட உதவ வேண்டிய கையேடும் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று பல ஆசிரியர்களும் கூறுகின்றனர். தவெக அரசு பதவி ஏற்று 50 நாளை கடந்து விட்டது. மே 10ம் தேதி பதவி ஏற்பு நடந்தது.*

*அப்போதே கல்வி அமைச்சராக ராஜ்மோகன் பதவி ஏற்று விட்டார். ஆனால் அவர் மற்ற துறைகள் குறித்த கேள்விகளுக்கெல்லாம் பட்டிமன்றத்தில் பதில் சொல்வதுபோல பதில் சொல்கிறார். ஆனால் சொந்த துறையில் இது வரை மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் வழங்காதது குறித்து அவர் நேரடியாக எந்த பதிலையும் கூறாமல் உள்ளார். அதேநேரத்தில் பாடப் புத்தகங்கள் வழங்க அரசு முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கல்வியாளர்களிடம் இருந்து குற்றச்சாட்டுகள் வரத் தொடங்கியுள்ளன.*

### பெற்றோர் அதிர்ச்சி!

*மூன்றாம் வகுப்பு படிக்கும் குழந்தையின் தாய் ஒருவர் கூறுகையில்:*

*எங்களுக்குத் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடப்புத்தகங்கள் கிடைத்தன, ஆனால் மற்ற பாடங்களுக்கானவை கிடைக்கவில்லை. என் குழந்தை பாடவேளைகளில் குறிப்புகள் எடுத்து அவற்றைப் பயன்படுத்திப் படிக்கிறாள், ஆனால் அவள் படிப்பது சரியா என்பதைச் சரிபார்க்க எங்களுக்கு வழியில்லை," என்று அவர் கூறினார். பாடப்புத்தகங்களின் பிடிஎப் பதிப்புகள் கிடைக்கின்றனவா என்பதும் தங்களுக்குத் தெரியாது என்று பெற்றோர்களும் தெரிவித்தனர்.*

*அதேபோல், நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், 8ம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன், கடந்த 4ம் தேதி வீடியோ ஒன்றை வெளியிட்டார். அதில் அவர், 'வணக்கம், நான், பள்ளிப்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், 8ம் வகுப்பு படிக்கிறேன். என்னை போன்ற சில மாணவர்களுக்கு, இன்னும் புத்தகம் வழங்கவில்லை. ஆசிரியரிடம் கேட்டால், 'அக்கம் பக்கத்தினரிடம் வாங்கி படி' என்கின்றனர். புத்தகம் இல்லாமல் படிப்பதற்கு சிரமமாக உள்ளது. புத்தகம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்' என, தெரிவித்திருந்தார். இந்த வீடியோவை மற்ற மாணவர்களின் பெற்றோர் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.*

*இது குறித்து, பள்ளிப்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் உமா மகேஷ்வரனிடம் கேட்ட போது, "கடந்தாண்டு, 8ம் வகுப்பில், 33 மாணவர்கள் படித்தனர். இந்தாண்டு, 44 பேர் படிக்கின்றனர். 33 மாணவர்களுக்கு, அரசு புத்தகம் வழங்கி உள்ளது. அதை வாங்கி மாணவர்களுக்கு வழங்கி உள்ளோம். வீடியோ வெளியிட்ட மாணவர், ஆங்கில வழிக்கல்வி மாணவர். அவருக்கு, புத்தகம் வழங்கி விட்டோம். மீதமுள்ள மாணவர்களுக்கு, வரும், 10ம் தேதிக்குள் புத்தகங்களை வழங்கிவிடுவோம்," என்றார்.*

*தமிழ்நாடு முழுவதும் இதுபோன்று அனைத்துப் பள்ளிகளிலும் ஏற்பட்டுள்ள சிரமங்களை பார்க்கையில், அரசுப் பள்ளிகளில் 50 சதவீத மாணவர்களுக்கு மட்டுமே பாடப்புத்தகங்கள் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. பல பள்ளிகளில் முழுமையாக பாடப் புத்தகங்கள் இன்னும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பாடப் புத்தகங்கள் இல்லாமலேயே அரசு பள்ளிகளில் மாணவர்கள் படித்து வருகின்றனர்.*

*பாடப்புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படாததால் மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது எடுக்கும் குறிப்பை வைத்து மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதற்கு பல கல்வியாளர்களும் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். எல்லாருக்கும் எல்லாமே சென்று சேர்கிறதா என முதலமைச்சர் பார்க்க சொல்லி இருக்கிறார். ஏதேனும் சிறு தவறுகள் நடந்தாலும் அதில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் சமீபத்தில் கூறி இருந்தார். அவ்வாறு கூறியவருக்கு அரசுப்பள்ளி மாணவர்களின் கதறல் கேட்கவில்லை போல என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.*